DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**CC.No. 143/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | ஜே.கே.மணி | Age | : | 42 |
| F/N | : | குழந்தைவேலு | Occupation | | விவசாயம் |
| Village | : | மணக்குடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 01-st day of September 2022.

**01.09.2022.**

**முதல் விசாரணை:**

நான் இராமாநதபுரம் மாவட்டம் மணக்குடியில் குடியிருந்துகொண்டு விவசாயவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2–வது எதிரி அபிராமி என்பவரையும் தெரியும். (**சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார். 2–வது எதிரி ஆஜராகவில்லை. கு.விமு.ச 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது**). கடந்த 24.11.2010–ம் ஆண்டு சந்திரசேகர், அபிராமி, பாலநமச்சிவாயம், சண்முகசுந்தரம் மற்றும் சண்முகநாதன் ஆகிய ஐந்து பேரும் சத்திரக்குடி வளநாடு அருகில் உள்ள முருகன் கோவிலுக்கு சொந்தமான 100 ஏக்கர் இடத்தில் உள்ள காட்டு கருவேல மரங்களை விறகுகளை வெட்டிக்கொள்ளும்படி என்னிடம் வந்து கேட்டார்கள்.

மேற்படி இடத்தில் உள்ள விறகுகளை வெட்டுவதற்கு ரூ. 65,00,000/– என்று பேசி முன் பணமாக ரூ. 24,00,000/–த்தை சந்திரசேகர், அபிராமி ஆகியோரிடம் அவர்களது வீட்டில் வைத்து கொடுத்தேன். அதன்பிறகு அவர்கள் அந்த இடத்தில் உள்ள விறகுகளை வெட்டுவதற்கு Order Copy ஒன்றை கொடுத்தார்கள். நான் விறகுகளை வெட்டச்சென்றபோது அறநிலையத்துறை அதிகாரிகள் என்னை விறகு வெட்ட விடாமல் தடுத்துவிட்டார்கள். நான் காரணம் கேட்டு என்னிடம் உள்ள Order Copy யை காண்பித்த போது அது போலியான Order Copy என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு நான் மேற்படி இடத்தில் விறகு வெட்டவில்லை. என்னிடம் பணம் வாங்கியவர்களிடம் நான் பணத்தை திருப்பி கேட்டபோது பணத்தை உடனே தரமுடியாது 6 மாத காலம் பொறுத்திருங்கள் என்று சொன்னார்கள்.

அதன்பிறகு நான் கேட்டபோது ஆஜர் 3 வது எதிரி ரூ. 6,00,000/– என்னிடம் திருப்பிக்கொடுத்தார். அதன்பிறகு எதிரிகள் எனது பணத்தை திருப்பிக்கொடுக்காததால் நான் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அதன்பிறகு மதுரை உயர்நீதிமன்றத்தில் சமரசமாக பேசுவதற்கு அழைத்தார்கள். அந்த பேச்சுவார்த்தையில் எதிரிகள் அனைவரும் சேர்ந்து பணத்தை திருப்பிக்கொடுத்துவிடுவதாக சொல்லி வழக்கை திரும்ப பெற சொன்னார்கள். நான் பணத்தை கொடுத்தால் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். அந்த பேச்சுவார்த்தையில் 1,75,000/–

ரூபாய் கொடுத்தார்கள்.

அதன்பிறகு எந்த பணமும் கொடுக்கவில்லை. நான் எதிரிகளிடம் பணத்தை கேட்டபோது வழக்கில் பார்த்துக்கொள்வோம் என்று சொல்லிவிட்டார்கள். இதுசம்பந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து என்னை விசாரித்தார்கள். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதை நான் தான் கொடுத்தேன். **(புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நான் கொடுத்த பணத்திற்கு எதிரிகள் எனக்கு ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை</u>**

**ஒப்பம்/–க. பிரபாகரன்**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**